www.tamilarangam.net

# மரணித்தும் எழுவோம்!

எம் பாச பூமியை விட்டுப் பிரிந்த நாம் எம் தேசத்தை இட்டு இன்னும் மௌமாகவே உள்ளோம். இந்த மௌனத்தைக் கலைத்து

எம்மைக் இக் கதிக்கு ஆளாக்கிய வரலாற்றுத் தலைமைகளை நாம் என்ன செய்யப் போகிறோம் ?

எமது தேசத்தின் கறை படிந்த அத்தியாயம் ஆங்கிலேயர் நாட்டை விட்டு வெளியேறிய பத்து மாதங்களின் பின் எம் சகோதரர்கள் ஆண்ட பரம்பரையின் ஒப்புதலுடன் ( ஜீ ஜீ ) மலையக மக்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள்

கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் எமது பாரம்பரிய பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1956 இல் தனிச் சிங்களச் சட்டம் இயற்றப்பட்டு நாம் இரடண்டாம்தர பிரசைகளாக்கப்பட்டோம்.

1957 இல் செல்வா பண்டா ஒப்பந்தம். இது கண்டியாத்திரை புகழ் ஜே ஆர் ஜெயவர்த்தனாவினால் முறியடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1958 இல் உயிரழிப்பின் மூலம் தமது எண்ணத்தை செயற்படுத்த தொடங்கினர்.

இவ் வரவாற்றுப் பின்னணியல் உருவாகிய தமிழ் தேசியத்துக்கு தலைமை தாங்கினார் தந்தை செல்வா. ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமது நனனுக்கேற்ற வகையில் குரல் கொடுக்கத் தொடங்கினார். இவர்களின் சத்தியாகிரக போராட்டம் வன்முறையால் அடக்கப்பட்டது.

1964 இல் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் மீண்டும் மலையக மக்களை இன்னலுக்குள்ளாக்கினார்கள். இதற்கு ஒத்துழைக்காமல் மேலவை உறுப்பினராக இருந்த திரு. எம் மாணிக்கம் செனற் சபையிலிருந்து வெளியேறினார்.

1972 இல் சிறிமா அரசின் தரப்படுத்தல் , அப்போ கிளம்பிய தமிழ் இளைஞர்களின் எழுச்சி

1974 இல் இடம் பெற்ற தமிழாராட்சி மாநாட்டின் போது அரசினால் நடாத்தப்பட்ட ஒன்பது உயிர் பலிகளைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தின் முன்னோடியும், தனது மனவுறுதியை மற்றவர்களுக்கு விட்டுச் சென்ற உரும்பிராய் சிவகுமாரன் தற்கொலை.

இப்படியே இன்பம் செல்வத்தின் கொலையுடன் இனப் படுகொலையாக 77 இல் நாடு தழுவிய ரீதியாகவும்

1981 இல் உள்ளூர் தேர்தல் நேரத்தின் போது தென்னாசியாவின் சிறந்த கலைப் பொக்கிசமான யாழ் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து தமிழரின் புதிய ஆண்டாக வர்ணிக்கப்படும் 23 ஆடி 83 இனவெறியின் கோரத் தாண்டவம் கோடிக்கணக்கான சொத்துக்கள் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டதோடு பல லட்சம் மக்களையும் அகதிகளாக்கியது.. இந்திய அரசின் தூதர்களாக நரசிம்மராவும் பாரத்த சாரதியும் வந்து போனார்கள் இப்படி இலங்கை அரசு இனப் பிரச்சனையை தீர்ப்பதற்கு முயற்சி எடுப்பதாக நாடகமாடியது. வட்டமேசை மாநாடு என்றும் திம்புப் பேச்சு வார்ததை என்றும் பெங்களூர் மாநாடு என்றும் தொடர்நது கொண்டிருந்த வேளையில் இலங்கை அரசு வடமராட்சி பகுதியில் தாக்குதலை மேற் கொண்டது. இதையே தருணம் என்று கணித்த ராஜீவ் காந்தி ' கருணை ' யுடன் தனது படையை அனுப்பி வைத்தான். இதனைத் தொடர்ந்து ஒப்பந்தம், யுத்த நிறுத்தம், மோதல் , வெளியேற்றம், இலங்கை அரசு இயக்கங்களுடன் தேன்நிலவு நிகழ்வுகளாகி பின்பும் பேச்சுவார்த்தை தெரிவுக்குழு, தொண்டமான் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேற்றம் இப்போ Paris இல் பேச்சுவார்த்தை. . . . .

இந்த நாடகங்கள் ஏன் என்பது பற்றி ஆராந்தால் எல்லாம் ஆளும் கட்சிகள் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளே. இந்நிலைமைகளை அம்பலப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமை எமீ மீது சுமத்தப்பட்டுள்ளது. எமது பொது எதிரியான இலங்கை அரசை சர்வதேச ரீதியில் அம்பலப் படுத்துவதுடன் மலையக , முஸ்லீம், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க போராடுவோம்.

**சுயாதீன தகவல் மையம்**

**நோர்வே.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்